**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
**கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**
**(14.04.2017முதல் 18.04.2017)**

**அறிக்கைஎண் :030/2017** **தேதி:13.04.2017**

**மாநிலத்தின் கடந்தவாரவானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 34°செ முதல் 41°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 25°செ முதல் 30°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 22°செ முதல் 26°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 13°செ முதல் 14°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஆங்காங்கே தூறல் மழை பெறப்பட்டது.

**எதிர்பார்க்கப்படும் வானிலை கோயமுத்தூர் (14. 04. 2017 முதல் 18. 04. 2017)**

வரும் நாட்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடன் காணப்படும். வறண்ட வானிலை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 37°செ முதல் 38°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 25°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 74 சதவிகிதமாகவும், மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 40 சதவிகிதமாகவும் பதிவாகவாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 10 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் தெற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| தேதி | மழை (மி.மீ) | அதிகபட்ச வெப்ப நிலை (°செ) | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | மேக மூட்டம் (ஆக்டா) | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | காற்றின் வேகம் (கி.மீ/ மணி) | காற்று வரும் திசை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 14.04.17 | 0 | 38 | 25 | 5 | 74 | 40 | 10 | தென் மேற்கு |
| 15.04.17 | 0 | 38 | 25 | 5 | 74 | 40 | 10 | தென் மேற்கு |
| 16.04.17 | 0 | 38 | 25 | 5 | 74 | 40 | 10 | தென் மேற்கு |
| 17.04.17 | 0 | 37 | 25 | 5 | 74 | 40 | 10 | தெற்கு |
| 18.04.17 | 0 | 37 | 25 | 5 | 74 | 40 | 10 | தெற்கு |

**வேளாண் அறிவுரை**

- ✓ பகல் மற்றும் இரவு நேர வெப்பநிலை உயர்ந்தும் மற்றும் காற்றின் ஈரப்பதம் குறைந்தும் காணப்படுவதால் தென்னை உட்பட அனைத்து இறவை பயிர்களுக்கும் மண்ணின் ஈரப்பதத்திற்கேற்பநீர் பாய்ச்சவும்.
- ✓ பகல் மற்றும் இரவு நேரவெப்பநிலை உயர்ந்தும் மற்றும் காற்றின் ஈரப்பதம் குறைந்தும் காணப்படுவதால் சுழல் காற்றுவீச அதிக வாய்ப்புள்ளது. எனவே ஐந்து மாதங்களுக்கு மேலுள்ள வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும்.
- ✓ வெப்பநிலை உயர்ந்து காணப்படுவதால் கால்நடைகளுக்கு அதிகாலை, மாலை மற்றும் இரவு நேரங்களில் தீவனம் கொடுப்பதுவெப்ப அயற்சியை குறைக்கும்.
- ✓ சில பகுதிகளில் தொடர்ந்து வறண்ட வானிலை காணப்படுவதால் மரவள்ளிகிழங்கில் சுருள் வெள்ளை ஈ வர வாய்ப்புள்ளது. இதற்கு விவசாயிகள் மஞ்சள் ஒட்டும் பொறி ஏக்கருக்கு 5 – 6 இடங்களில் வைக்கவும். தேவைப்பட்டால் புரோனோபாஸ் 2 மில்லி அல்லது அசிபேட் 2 கிராம் ஒருலிட்டர் தண்ணீரில் கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம்.
- ✓ தொடர்ந்து வறண்ட வானிலை காணப்படுவதால் கரும்பின் நுனிக்குருத்துப்புழு வர வாய்ப்புள்ளது. எனவே அடிக்கடி நீர் பாய்ச்சி கரும்பு வயலை ஈரமாக வைத்துக் கொள்வதுடன் பயிர் மூடாக்கும் செய்யலாம்.

**குறுஞ்செய்தி**

- ✓ தொடர்ந்து வறண்ட வானிலை காணப்படுவதால் கரும்பின் நுனிக்குருத்துப்புழு வர வாய்ப்புள்ளது. எனவே அடிக்கடி நீர் பாய்ச்சி கரும்பு வயலை ஈரமாக வைத்துக் கொள்வதுடன் பயிர் மூடாக்கும் செய்யலாம்.

**பேராசிரியர் மற்றும் தலைவர்**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை.**